**<u>மிகவும் அவசரம் /</u>**

**<u>மாண்புமிகு தமிழக முதல்வரின் விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்</u>**

தொழில் நுட்பக் கல்வித் துறை

அனுப்புநர்
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,
சென்னை – 600 025.

பெறுநர்
முதல்வர் / முதல்வர் (பொறுப்பு)
அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்கள்.
டாக்டர் எம்.ஜி.ஆர். திரைப்படக் கல்லூரி, சென்னை
அரசு செராமிக் கல்லூரி, விருதாச்சலம்
அரசு தொழில் நுட்பக் கல்லூரி, கிண்டி, சென்னை
கருவியியல் பாலிடெக்னிக் கல்லூரி, திண்டுக்கல்

கடித எண்.25470/கே–1/2011, நாள் 15.12.2015

ஐயா / அம்மையீர்,

பொருள் பண்டகம் – தொழில் நுட்பக் கல்வித் துறை – 2014–2015–ம் கல்வியாண்டிற்கான மாண்புமிகு தமிழக முதல்வரின் விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் முழுமையாக விநியோகிக்கப்பட்டதா என்பதை உறுதிசெய்து கொண்டு பயிலக இருப்பில் உள்ள மடிக்கணினிகளை சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் ஒப்படைக்க கேட்டல் – தொடர்பாக.

பார்வை தொழில் நுட்பக் கல்வி இயக்கக மேற்குறிப்பாணை எண்.25470/கே1/2011, நாள்

----

2014–2015–ம் கல்வியாண்டிற்கான மாண்புமிகு தமிழக முதல்வரின் விலையில்லா மடிக்கணினிகளை முழுமையாக மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டதா என்பதை உறுதிசெய்த பின்னர், ஏற்கெனவே PROFORMA I-A–ல் இவ்விவரங்கள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பாமல் இருப்பின், PROFORMA I-A–ஐ இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படியும், 2014–2015–ம் கல்வியாண்டில் பெறப்பட்ட விலையில்லா மடிக்கணினிகளில், மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட விலையில்லா மடிக்கணினிகள் போக நிலுவையில் உள்ள விலையில்லா மடிக்கணினிகளை உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் ( சென்னை மாவட்டம் சென்னை மாநகராட்சி அலுவலகம் / இதர மாவட்டங்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ) ஒப்படைத்து விட்டு, அவ்விவரத்தை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் அந்தந்த கல்வியாண்டுகளில் பெறப்படும் விலையில்லா மடிக்கணினிகளில், மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட விலையில்லா மடிக்கணினிகள் போக நிலுவையில் உள்ள விலையில்லா மடிக்கணினிகளை சென்னை மாநகராட்சி அலுவலகம் மற்றும் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்காமல் பயிலக இருப்பில் உள்ள விலையில்லா மடிக்கணினிகள் காணாமல் போனால் அம்மடிக்கணினிகளுக்கான தொகை அரசுக்கு ஏற்படும் நிதி இழப்பீட்டினை தவிர்க்கும் பொருட்டு சம்மந்தப்பட்ட பொறுப்பான அலுவலரிடமிருந்து பிடித்தம் செய்து அரசுக் கணக்கில் செலுத்த நடவடிக்கை தொடரப்படும் என்று தெரிவிக்கப்படுவதுடன், இந்நேர்வினை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு அந்தந்த கல்வியாண்டில் நிலுவையில் உள்ள விலையில்லா மடிக்கணினிகளை சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் உடனுக்குடன் ஒப்படைக்க துரித நடவடிக்கை முதல்வர் நிலையில் தொடரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உ. செல்வி 15/12.2015

தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்காக.

நகல் இயக்குநர், சிறப்பு செயலாக்க திட்ட துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009
( தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது )

நகல் அரசு செயலாளர், உயர்கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009
( தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது )